தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 29-4-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் மாணவர்களுக்கான தொழில்துறை வேலைவாய்ப்பு பயிற்சி

வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை தொழில்நுட்பத்தில் எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் மற்றும் உணவு பதன்படுத்துதல் பொறியியலில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவர்களுக்கு தங்களுடைய பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக 8-ம் பருவத்தில் 80 நாட்கள் தொழில்துறை வேலைவாய்ப்பு பயிற்சி திட்டமிடப்பட்டுள்ளது. இதன் பொருட்டு மரபுசாரா எரிசக்தி, சுற்றுச்சூழல் மற்றும் உணவு பதப்படுத்தல் துறை சார்ந்த இந்தியாவிலுள்ள பல்வேறு தொழில்சாலைகளைத் தொடர்புகொண்டு மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப அங்கு அனுப்பப்படுகின்றனர்.

இப்பயிற்சியின் போது மாணவர்கள் 80 நாட்களும் தொழிற்சாலைகளிலேயே தங்கி பணிபுரிகின்றனர். மேலும் மாணவர்களின் திறமைகளை மதிப்பிடும் பொருட்டு 28-4-2016 அன்று பிற்பகல் 9.30 முதல் 2.00 மணியளவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்தின் தொழில்நுட்ப பூங்கா -3ல் தொழில்நுட்பம் சார்ந்த பொருட்காட்சி நடைபெற்றது. இப்பொருட்காட்சியில் மாணவர்கள் பல்வேறு தொழிற்சாலைகளில் தாங்கள் பணிபுரிந்த துறையின் கீழ் பயின்ற தொழில்சார்ந்த பிரச்சனைகளையும் அவற்றிற்குரிய தீர்வுகளையும் இப்பொருட்காட்சியில் மாதிரி வடிவங்களாகவும் ஆவணப்படங்களாகவும் காட்சிபடுத்தினர்.

வேளாண்மைப் பல்கலைகழகத்தின் துணைவேந்தர் முனைவர். கு. ராமசாமி அவர்கள் தொழில்துறை வேலைவாய்ப்பு பொருட்காட்சியைத் துவக்கி வைத்து மாணவர்களுடன் கலந்துரையாடி மாணவர்களை பெரிதும் ஊக்கப்படுத்தினார்.

வேளாண் பொறியியல கல்லூரியின் முதல்வர் முனைவர். C. திவாகர் துரைராஜ் அவர்கள் இந்த ஆண்டு படித்து முடித்துச் செல்லும் மாணவர்களை அவர்கள் சிறந்த முறையில் தொழில்துறை வேலைவாய்ப்பு பயிற்சியினை முடித்தமைக்காகப் பாராட்டினார். மேலும், இந்த பொருட்காட்சி மூன்றாம் ஆண்டு மற்றும் இதர மாணவர்கள் இந்த பயிற்சி பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள ஏதுவாக அமைந்திருக்கின்றது என்று கூறினார். அவர் பல்வேறு தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்ற 25 மாணவர்களையும், தேசிய மற்றும் உலகளாவிய சிறந்த கல்வி நிறுவனங்களில் மேற்படிப்பிற்கான அனுமதி பெற்ற 20 மாணவர்களையும் மிகவும் பாராட்டினார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்